PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

27.6.2023
ஊடக வெளியீடு 2:
PBA ஹோல்டிங் பெர்ஹாட் (PBAHB) 23வது ஆண்டு பொதுக் கூட்டம்.

**IR.பத்மநாதன் K.**
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP

**PBAPP பினாங்கில் முன்பை விட கூடுதலான நீர் விநியோகிக்க உத்தேசிக்கிறது**

- **கூடுதலான நீர் தேவை மற்றும் குறைந்த மழைப்பொழிவு PBAPP-ஐ ரிம1.1836 பில்லியன் மதிப்பிலான மொத்த முதலீட்டில் அவசர நீர் விநியோக திட்டங்களின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டை விரைவுபடுத்துவதற்கு கட்டாயப்படுத்துகிறது.**

பினாங்கு, செவ்வாய், 27.6.2023: 2023 ஆம் ஆண்டில் பினாங்கின் நீர்நிலையானது, ரிம1.1836 பில்லியன் மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்கு பினாங்கு நீர் விநியோக வாரியம் சென்.பெர்ஹாட்(PBAPP) நிறுவனத்தைக் கட்டாயப்படுத்துகிறது.

2023 இல் கவனம் செலுத்த வேண்டிய இரண்டு காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன:

1. கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தினால் அனைத்து சமூகப் பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய உயர் நீர் தேவையின் அடிப்படையில், 2023 முதல் காலாண்டில் சராசரியாக ஒரு நாளைக்கு 876 மில்லியன் லிட்டர் (MLD) நீர் பயன்பாட்டைக் குறிக்கிறது.

2. 1.1.2023 முதல் 31.5.2023 வரையிலான காலக்கட்டத்தில் பினாங்கு மாநிலத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் (WCAs) 50% - 60% குறைவான மழைப்பொழிவு காரணத்தினால் 2023 இல் ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் இருப்புகளைக் குறைத்துவிட்டது.

எனவே, PBAPP அதன் 8 நீர் தற்செயல் திட்டம் 2030(WCP 2030) திட்டங்களைச் செயல்படுத்துவதை விரைவுபடுத்த வேண்டும்:

| திட்டங்கள் | | இலக்கு நிறைவு | **திட்டமிடப்பட்ட முதலீடு (ரிம மில்லியன்)** |
|---|---|---|---|
| 1. | புக்கிட் பஞ்சோர் DAF (dissolved air flotation) நீர் சுத்திகரிப்பு ஆலை (WTP). | 2023 | **18.6** |
| 2. | தொகுப்பு 12A, சுங்கை டுவா WTP (கூடுதல் நீர் சுத்திகரிப்பு தொகுப்பு). | 2023 | **31.0** |
| 3. | சுங்கை டுவா WTP இல் இருந்து செபராங் பிறை, பட்டர்வொர்த் வரையில் 13.0கி.மீ தூரத்தில் 1,800மிமீ குழாய்கள் பொருத்துதல் | 2024 | **128.0** |
| 4. | மெக்கலம் பகுதியிலிருந்து PBAPP புக்கிட் டம்பார் நீர்த்தேக்கம் மற்றும் பினாங்கு தீவில் உள்ள பம்பிங் நிலைய வளாகத்திற்கு 3.9கிமீ தூரத்தில் 1,800மி.மீ குழாய்கள் பொருத்துதல் | 2024 | **44.0** |

| | | | |
|---|---|---|---|
| 5. | மெங்குவாங் அணை WTP | 2025 | **120.0** |
| 6. | சுங்கை கெரியான் WTP | 2027 | **171.0** |
| 7. | சுங்கை பிறை நீர் விநியோகத் திட்டம் (மூல நீர் சுத்திகரிப்பு உட்பட) | 2028 | **500.0** |
| 8. | சுங்கை மூடா WTP | 2028 | **171.0** |
| மொத்தம் | | | **1,183.6** |

WCP 2030 திட்டங்களினால் பெறப்படும் முக்கிய நன்மைகள்:

அ. 2030 ஆம் ஆண்டு வரை பினாங்கு மாநிலத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் தொடர்ந்து சிறந்த நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக PBAPP இன் நீர் சுத்திகரிப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோக திறனை ஒரு நாளைக்கு 602 மில்லியன் லிட்டர் (MLD)-க்கு மேம்படுத்துதல்.

ஆ. 2030 வரை தென் செபராங் பிறையில் (SPS) நீர் விநியோகச் சிக்கல்களைத் தீர்ப்பது.

இ. விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD), சுங்கை பிறை மற்றும் சுங்கை கெரியான் ஆகிய 3 மாற்று தினசரி மூல நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தத் திட்டமிடுதல்.

ஈ. 2030க்கு முன்னதாக "பினாங்கு - பேராக் நீர் திட்டம்" செயல்படுத்தப்படும் வரை இது பினாங்கிற்கான “Buying time” ஆகும்.

**PBAPP இன் WCP 2030 திட்டங்கள் சுங்கை மூடா நீர் ஆதாரத்திற்கான மாற்று நீர் திட்டம் இல்லை என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்.**

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

பினாங்கின் முதன்மையான மூல நீர் ஆதாரமான சுங்கை மூடாவிலிருந்து 1,000 MLD-க்கும் அதிகமான மூல நீரை நாம் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

**WCP 2030 திட்டங்கள் மாநில அரசாங்கத்தின்** "பினாங்கு 2030" இலக்குக்கு ஆதரவாக **2030 வரை பினாங்கின் நீர் தேவையைப் பூர்த்தி செய்யும்.**

<u>அதிக நீர்ப் பயன்பாடு</u>

1999 இல் PBAPP கார்ப்பரேஷனாக உருமாற்றம் கண்டதிலிருந்து பினாங்கின் நீர் பயன்பாடு 61.9% அதிகரித்துள்ளது, 1999 இல் ஒரு நாளைக்கு 536 மில்லியன் லிட்டர் (MLD) இருந்து 2022 இல் 868 MLD ஆக உயர்ந்துள்ளது.

2023 இன் முதல் காலாண்டில் (ஜனவரி - மார்ச் 2023), நீர்ப் பயன்பாடு மேலும் 876 MLD ஆக அதிகரித்தது.

**பினாங்கின் அதிகமான நீர்ப் பயன்பாட்டிற்குப் பிரதான காரணமாக உள்நாட்டு நீர் பயன்பாடு அமைகிறது.**

2022 ஆம் ஆண்டில், பினாங்கில் உள்ள மொத்த நீர்ப் பயன்பாட்டில் சுமார் 61.6% உள்நாட்டு பயன்பாடு (868 MLD இல் சுமார் 534 MLD) ஆகும்.




PBAPP தரவு அடிப்படையில், தனிநபர் உள்நாட்டு பயன்பாடு, 23 ஆண்டுகளில் 20.4% அதிகரித்துள்ளது. 1999 இல் 255 லிட்டர்/கபிதா/நாள் (LCD) இருந்து 2022 இல் 307 LCD ஆக அதிகரித்துள்ளது.



PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

<u>அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு</u>

இதற்கிடையில், பினாங்கின் 3 பெரிய அணைகளின் அண்மைய சூழ்நிலை பின்வருமாறு:

| அணைகள் | | பயன்பாட்டு திறன 1.1.2023 | பயன்பாட்டு திறன் 24.6.2023 |
|---|---|---|---|
| 1. | ஆயிர் ஈத்தாம் அணை | 82.5 | **52.8%** |
| 2. | தெலுக் பஹாங் அணை | 64.0 | **44.6%** |
| 3. | விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை | 87.7 | **88.7%** |

ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை ஆகியவை "தினசரி அணைகள்" என்பதை கவனத்தில் கொள்ளவும். அதில் இருந்து ஆயிர் ஈத்தாம் WTP, பத்து பிரிங்கி WTP மற்றும் Guillemard WTP ஆகிய ஆலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்வதற்காக தினசரி மூல நீர் எடுக்கப்படுகிறது. தற்போது, EMD என்பது சுங்கை மூடாவிலிருந்து போதுமான மூல நீரை PBAPP எடுக்க முடியாதபோது, சுங்கை டுவா WTP-இல் பயன்படுத்துவதற்காக மட்டுமே நீரைச் சேமிக்கும் "வியூக வறட்சி அணை" திட்டம் ஆகும்.

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் நீர்மட்டம் 100% ஆக இல்லை. 2022 முதல் இந்த அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் (WCAs) குறைந்த மழைப்பொழிவு மற்றும்
பருவநிலை மாற்றமும் இந்தக் காரணிகளில் அடங்கும்.

**2023 இல், WCA-களில் PBAPP வழக்கத்திற்கு மாறாக குறைந்த மழைப்பொழிவைத் தொடர்ந்து பதிவு செய்கிறது:**

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*







இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில், ஆயிர் ஈத்தாம் அணை WCA இல் மொத்தம் 342.5 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இந்த மழை அளவு 5 ஆண்டுகளின் சராசரியான **59.9% விட**

**அதாவது 853.5 மி.மீ விட குறைவாகப் பதிவு செய்கிறது.**

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

அதே காலக்கட்டத்தில், தெலுக் பஹாங் அணை WCA இல் மொத்தம் 723 மி.மீ மழையைப் பதிவு செய்துள்ளது. இந்த மழை அளவு **5 ஆண்டு சராசரியான 50.4% அதாவது 1458.1 மி.மீ விட குறைவாக உள்ளது.**

<u>முடிவுரை</u>

சுருக்கமாக, **பினாங்கு வரலாற்றிலே முன்பை விட இல்லாத அளவுக்கு அதிகமான நீரை விநியோகிக்க PBAPP தயாராகி வருகிறது.**

பொறுப்பான நீர் விநியோக வாரியமான PBAPP, நீர் விநியோக தடையை விரும்பவில்லை. அதற்குப் பதிலாக, எங்களால் இயன்ற அளவு, நீர் விநியோக தடையைத் தவிர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்.

இருப்பினும், இத்திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது: WCP 2030 திட்டங்கள் செயல்படுத்த ரிம1.1836 பில்லியன் மொத்த முதலீட்டில் செயல்படுத்த வேண்டும். எப்படியாவது மீண்டும் செயல்படுத்த இணக்கம் கொள்ள வேண்டும்; மேலும் இது பினாங்கில் எதிர்காலத்தில் நீர் கட்டணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

PBAPP வாரியத்தால் என்ன செய்ய முடியும் என்பதற்கும் ஒரு வரம்பு உள்ளது: முழுமையற்ற மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டமானது (MDEP) மத்திய அரசாங்கத்தின் அசல் ரிம1.2 பில்லியன் மானியத்திலிருந்து மீதமுள்ள ஒதுக்கீடுடன் மட்டுமே இத்திட்டத்தை நிறைவு செய்யக்கூடும்.

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

பினாங்கில் தற்போதைய நீர் விநியோக சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, **நீர் பயனீட்டாளர்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.** 21.5.2023 அன்று ஆயிர் ஈத்தாம் அணையில் உலக நீர் தினத்தின் போது பினாங்கு முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் விடுத்த "நீரை சேமிப்போம்" என்ற கோரிக்கையை அனைவரும் தயவுசெய்து பின்பற்ற வேண்டும்.

செப்டம்பரில் மழைக்காலம் வருவதற்குள் நீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க, **பினாங்கு பயனீட்டாளர்கள் நீர்ப் பயன்பாட்டை 20% குறைக்கவும்.**

நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு: தயவுசெய்து www.pba.com.my அகப்பக்கத்தைப் பார்வையிடவும்:

நன்றி

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் : syarifah@pba.com.my